**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

பதினான்காவது சட்டப்பேரவையின் ஆறாவது கூட்டத்தொடராகிய, **2013** ஆம் ஆண்டின் இந்த முதல் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாக உரையாற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்காக, தமிழ்நாட்டு மக்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் செறிந்துள்ள மக்களாட்சிக் கோட்பாடுகளைக் கட்டிக்காக்கவும், பேணி வளர்க்கவும் பல பெருந்தலைவர்கள் ஆண்டாண்டுகாலமாக ஆற்றிய பெரும் பங்களிப்பின் காரணமாக, இந்த மாமன்றம் புகழின் உச்சியை எட்டியுள்ளது. அண்மையில், இப்பேரவை அறுபது ஆண்டுகளை நிறைவு செய்த வரலாற்றுத் தருணத்தை நினைவு கொள்ளும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் தக்கதொரு விழாவை ஏற்பாடு செய்து சிறப்பித்ததை நாம் கண்டோம். இந்த அரியதொரு வாய்ப்பைப் பயன்படுத்தி உங்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு, இந்த போற்றத்தக்க

மாமன்றத்தின் பரிணாம வளர்ச்சிக்கு பங்களித்த பெருந்தலைவர்களையும், அனைத்து உறுப்பினர்களையும் பெருமையோடும், நன்றிப் பெருக்கோடும் நினைவுகூற விரும்புகிறேன். இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்கிட வேண்டுமென்ற உறுதியான தீர்மானத்துடன் இந்த ஆண்டை நாம் அனைவரும் தொடங்குவோம்.

2. தளர்வுறாத துணிவு, அசையாத உறுதி, திடமான முடிவு, தீர்க்கமான நடவடிக்கை ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின் கீழ், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், முன்னேற்றப் பாதையில் நமது மாநிலம் பீடுநடை போட்டு வருகிறது. தன்னிகரில்லா மக்கள் தலைவராகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைப் பண்பிற்கும், ஏழை எளியோர் மீது கொண்டுள்ள எல்லையில்லா பரிவுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அதே நேரத்தில், சமூக விரோத சக்திகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி,

அமைதியும், நிலைத்தன்மையும் தவழும் சூழலை மாநிலத்தில் மீட்டெடுத்து, வேகமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட வழிவகை செய்துள்ளார். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் நோக்குடன், நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டங்களின் மூலமாகவும், சிறந்த செயல்முறை உத்திகள் மூலமாகவும் சீரிய நிர்வாகத்தை வழங்கிட அவர் மேற்கொண்டுள்ள அயராத முயற்சிகளுக்கு, உலகெங்கிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்தவண்ணமிருக்கின்றன. மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகளின் மாநாடு கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் முதன்முறையாக, தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. சீரிய நிர்வாகத்தை அளிக்கவேண்டும் என உறுதி பூண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநாட்டின் நிகழ்வுகளில் முழுமையாகப் பங்குகொண்டு, மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோர் முன்வைத்த அனைத்துக் கோரிக்கைகளையும் கூர்ந்து கவனித்து நிர்வாக நலன் கருதி அவற்றை நிறைவு செய்யும் வகையில், 343 அறிவிப்புகளையும் மாநாட்டிலேயே அறிவித்தது இதுவரை இம்மாநிலம் கண்டிராத நிகழ்வாகும்.

**3.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்துள்ளவாறு, இந்த அரசானது "**பங்கீட்டு நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சி**" என்ற குறிக்கோளை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. அனைவரையும் உள்ளடக்கிய முன்னேற்றத்தை அளிக்கக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாகவே இது சாத்தியமாகும். உணவு, உடை, உறைவிடம் போன்ற இன்றியமையா அடிப்படைத் தேவைகளை, அனைவரும், குறிப்பாக ஏழைகளும், ஒதுக்கப்பட்டோரும் நிறைவாகப் பெற்று அவர்கள் கண்ணியத்துடனும், கௌரவத்துடனும் வாழ வழி செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குறிக்கோள். மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குடைய தலைமையின் கீழ் செயல்படும் இந்த அரசு பொதுமக்கள் நலன் காக்கும் அரசாகத் திகழவேண்டுமென்ற இலட்சியத்தை அடைய, பல திட்டங்களைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது. அதே வேளையில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சூழலை உருவாக்க பல கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதன் மூலமாக, பொருளாதாரத்திலும், தொழில் துறைகளிலும் ஒரு பெரும்

வளர்ச்சியையும் நமது மாநிலம் காண உள்ளது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான வளர்ச்சியை ஏற்படுத்தி, மேம்பாட்டின் பயன் அனைவரையும் சென்றடையச் செய்யும் நோக்குடன் தீட்டப்படும் திட்ட செயல்முறையின் ஓர் அங்கமாக மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி (State Balanced Growth Fund) போன்ற புதுமையான அணுகுமுறைகளை இந்த அரசு கடைபிடித்து வருகிறது.

4. உலகெங்கும் சித்திரை மாதத்தின் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு தினமாக நீண்ட நெடுங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. முந்தைய ஆட்சியின்போது வேண்டுமென்றே இந்த முறை மாற்றப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இருந்த நடைமுறையை மீண்டும் கொண்டுவந்ததுடன், 2012–ஆம் ஆண்டில் தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டங்களில் தானும் பங்கு கொண்டு, தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, அவ்வையார் விருது போன்ற புதியதாக அறிவிக்கப்பட்ட விருதுகளையும் வழங்கினார். இந்த ஆண்டும் தமிழ்ப் புத்தாண்டு தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுவதோடு, **புதியதாக இந்த ஆண்டிலிருந்து கம்பராமாயணத்தின் உயரிய கருத்துக்களை பரப்பும் சிறந்த அறிஞருக்கு ‘கம்பர் விருதும்’,**

**சிறந்த இலக்கியப் பேச்சாளருக்கு 'சொல்லின் செல்வர் விருதும்' வழங்கப்படும்.**

**5.** விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் தன்னலமற்ற தியாகத்தை அங்கீகரித்து பெருமைப்படுத்துவதில் இந்த அரசு ஈடு இணையற்றதாக விளங்குகிறது. வீரத்துடனும் தீரத்துடனும் செயல்பட்ட வீரமங்கை வேலுநாச்சியார், தீரன் சின்னமலை, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோருக்கான நினைவிடங்கள் இந்த அரசால் அமைக்கப்பட்டு வருகின்றன. முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி, கர்னல் சர் ஜான் பென்னிகுயிக் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆற்றிய தன்னலமற்ற சேவையைப் பெருமைப்படுத்தும் வகையில் அவருக்கு நினைவு மணிமண்டபம் அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்துள்ளார்கள். அதேபோல், கல்லணையைக் கட்டி காவேரிப் பாசனப் பகுதியை தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக மாற்றிய கரிகால் சோழனுக்கு நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு பாராட்டுக்குரியது. தமிழ் மொழி, தமிழர் பண்பாட்டினை வளர்க்கும் பல்வேறு

நிறுவனங்களுக்கு தாராளமான நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு 100 கோடி ரூபாயும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 11.84 கோடி ரூபாயும், தரமணியில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 3.23 கோடி ரூபாயும் இந்த அரசால் வழங்கப்பட்டுள்ளது. **வரலாற்றுப் புகழ்பெற்ற சரஸ்வதி மகால் நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு உதவித்தொகை 40 லட்சம் ரூபாயிலிருந்து 75 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். இந்த நூலகத்தை உலகத்தரத்திற்கு உயர்த்திடத் தேவையான நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரை செய்வதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும்.**

6. அரசியல் நிலைத்தன்மையுடன், சட்டம் ஒழுங்கு முறையாகப் பராமரிக்கப்படுவது பொருளாதாரச் செழுமைக்கு இன்றியமையாத் தேவையாகும். மாண்புமிகு முதலமைச்சரின் விவேகமான தலைமையின் கீழ், சட்டம் ஒழுங்கு சீரிய முறையில் பாதுகாக்கப்பட்டு, மாநிலம் அமைதிப் பூங்காவாக மாறியுள்ளது. சாதிமத உணர்வுகளைத் தூண்ட முயலும் எவரையும் இந்த அரசு அனுமதிக்காது.

நிலம் அபகரிப்போர், சமூக விரோத சக்திகள், பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய அமைப்புகள் போன்றவை முழுமையாக ஒடுக்கப்பட்டுள்ளன. நில அபகரிப்பு முழுமையாக தடுக்கப்பட்டு, அதில் ஈடுபட்ட குற்றவாளிகள் சட்டத்தின் முன்பு நிறுத்தப்பட்டுள்ளனர். சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை திறம்படக் கையாளக் காவல்துறைக்குத் தமது வழிகாட்டுதலை வழங்கி உறுதியான ஆதரவையும், முழுமையான சுதந்திரத்தையும் அளித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். அவரின் உறுதியான, தீர்க்கமான முடிவின் காரணமாக உணர்வுகளைத் தூண்டிவிட்டு அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய 'டேம் 999', போன்ற திரைப்படங்கள் உரிய தருணத்தில் தடைசெய்யப்பட்டதால், பெரும் பாதிப்புக்கு இட்டுச் சென்றிருக்கக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எதுவும் மாநிலத்தில் எழாமல் தடுக்கப்பட்டுள்ளன. இது போன்ற திரைப்படங்களைத் தயாரிக்கும்போது, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களுடைய உணர்வுகள் புண்படாதவகையில் உருவாக்கப்பட வேண்டும் என்று திரைப்படத் தயாரிப்பாளர்களை கேட்டுக்கொள்கிறேன். நாகரிக

சமுதாயத்தில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிராக நடைபெறும் கொடுங்குற்றங்கள் அறவே நிறுத்தப்பட வேண்டும். நமது நாட்டில் பிறபகுதிகளில் உள்ள காவல் துறையினருக்கும், கொள்கைகளை வகுப்பவர்களுக்கும் வழிகாட்டக்கூடிய வகையில், கடுமையானதும், செயல்படுத்தி கண்காணிக்கக் கூடிய வகையிலும் அமைந்துள்ள, மாவட்டந்தோறும் மகளிர் விரைவு நீதிமன்றங்கள் அமைப்பது உள்ளிட்ட, 13 அம்ச திட்டத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணிவுடன் எடுத்துரைத்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

7. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்கும்போதெல்லாம், காவல் துறையினர் திறம்படச் செயல்படுவதற்காக அவர்களுக்கு போதிய கட்டமைப்பு, போக்குவரத்து வசதிகள், தளவாடங்கள் ஆகியவை வழங்கப்பட்டு, அவர்கள் எந்தவித அச்சமும் இன்றிக் கடமையாற்றி, பிரச்சினைகளைத் தீர்க்க வழி ஏற்படுகிறது. இதனால் அவர்களது ஊக்கமும் கட்டுப்பாடும் உயர்ந்தோங்குகிறது. காவல், சிறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கான படிகளை கணிசமாக உயர்த்தியும்,

தமிழ்நாடு காவலர் நல நிதியை உயர்த்தியும் உத்தரவிட்டுள்ளதோடு, நாட்டிலேயே முதன்முறையாக காவல் துறையினருக்காக மூன்று சலுகைவிலை அங்காடிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இது தவிர, கூடுதல் வீட்டுவசதிக்காக 472.50 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளதோடு, 36,000 காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் மற்றும் சிறைத் துறை பணியாளர்களுக்காக சொந்த வீடு கட்டித்தரும் பொருட்டு 'உங்கள் சொந்த இல்லம்' எனும் பெருந்திட்டத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் காவல் துறையினரை ஊக்குவித்து அவர்கள் தம் பணியில் மிகப்பெரும் பொறுப்புணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படத் தூண்டியுள்ளன.

8. பாக் ஜலசந்திப் பகுதியில் பாரம்பரியமாக மீன் பிடிப்பதையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தலாலும் கொலைவெறித் தாக்குதல்களாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். இப்பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர்

அவர்களை உடனடியாக இதில் தலையிட்டு, மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசிடம் வலியுறுத்தக் கோரி, 2011 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் இதுவரை 12 முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். தமிழக மீனவர்களின் இன்னல்கள் குறித்து மத்திய அரசு பாராமுகம் காட்டி வரும் நிலையில், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் அல்லல்கள், முடிவில்லாத் துயரமாக தொடர்வது குறித்து இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. நமது மீனவர்களைப் பாதுகாப்பதில் மத்திய அரசு காட்டிவரும் அலட்சியப் போக்கு இந்த அரசை மிகவும் வருத்தம் அடைய செய்துள்ளது. இந்தியக் குடிமக்களான அப்பாவித் தமிழ்நாடு மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்தவும், இதுபோன்ற சமயங்களில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவும், இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

9. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களும், தமிழின மக்களின் மீது நடத்தப்பட்ட இனப் படுகொலையும் மிகவும் கண்டனத்திற்கு உரியவையாகும். இப்பிரச்சினையை சர்வதேச அரங்குகளில் மத்திய அரசு

எடுத்துரைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை மறு குடியமர்த்தி அவர்களது துயரங்களைத் துடைப்பதற்காக இலங்கை அரசு எடுத்துவரும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதிர்பார்த்த அளவில் அமையவில்லை. முகாம்களில் குடியிருந்துவரும் தமிழர்கள் தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட்டு, சிங்களர்களுக்கு சமமான அரசியல் சட்ட உரிமைகளோடும், சுய மரியாதையோடும், கண்ணியத்தோடும் வாழ அனுமதிக்கப்படும் வரை இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும், இதற்காக இந்திய அரசு மற்ற நாடுகளோடு இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், 2011–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் எட்டாம் நாள் இந்தப் பேரவை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

**10.** மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளின் நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கினைப் பெற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயராது போராடி வருகின்றார்கள். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றும், எதிர்காலத்தில் வறட்சி சூழ்நிலைகளில், நீரினை சரிசம விகிதப்படிப் பங்கிடுவதற்கு

காவேரி நடுவர் மன்றம் உத்தரவிட்டும், கிடைக்கின்ற காவேரி நீர் முழுவதையும் கர்நாடக அரசு பயன்படுத்திக்கொண்டு, காவேரிப் பாசன பகுதி விவசாயிகளின் துயர நிலையைச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல், தமிழ்நாட்டிற்கு உரிய நீரை வழங்க மறுத்து, தொடர்ந்து பிடிவாதம் செய்துவருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகி, தக்க நேரத்தில் தொடர்ந்து எடுத்த முயற்சிகளின் காரணமாக கர்நாடக அரசு 63.55 டி.எம்.சி. அடி நீரை விடுவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனினும், இடர்பாடு காலங்களில் சரிசம விகிதாச்சார முறைப்படியான பங்கீட்டிலும் 31.4 டி.எம்.சி. அடி அளவிற்கு தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய நீர் விடுவிக்கப்படவில்லை. இதன் விளைவாக, இந்த ஆண்டில் காவேரிப் பாசனப் பகுதியில், உணவு உற்பத்தியில் தமிழகம் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. எனவே காவேரிப் பாசனப் பகுதியில் ஏற்பட்ட பயிர் பாதிப்பிற்கான இழப்பீட்டுத் தொகையை கர்நாடக அரசிடமிருந்து பெற ஏதுவாக இந்த அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை அரசிதழில் வெளியிட வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் தொடர் கோரிக்கையை மேலும் காலம் தாழ்த்தாமல் மத்திய அரசு ஏற்குமென நான் நம்புகிறேன். முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழு, கட்டமைப்பிலும், நீர்வள அளவிலும், நில அதிர்வுகளைத் தாங்கக்கூடிய வகையிலும் இந்த அணை பாதுகாப்பாக விளங்குவதாக தெரிவித்துள்ளது. எனவே, உச்ச நீதிமன்றம் நமது நிலைப்பாட்டினை உறுதிசெய்து, சாதகமான ஆணை வழங்குமென தமிழக அரசு நம்புகிறது.

**11.** நீர்ப் பயன்பாட்டிற்கு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்றும், இதற்காக தனி அதிகார அமைப்பு அமைக்கப்பட வேண்டுமென்றும் 2012–ஆம் ஆண்டு வரைவு தேசிய நீர்வளக் கொள்கை வலியுறுத்துகிறது. மாநில அரசின் அதிகாரங்களை பறிக்கும் பெரும் வரம்பு மீறலாக இதனை தமிழக அரசு கருதுகிறது. நீர்வளம் மாநிலங்களின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே, தங்களது நீர்வளம் குறித்த முடிவுகளை எடுப்பதற்கான சுதந்திரம் மாநிலங்களுக்கே உரியதாகும். இதுபோலவே, வரைவுக் கொள்கையில்

உத்தேசிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு மாநிலங்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட வேண்டுமென்றும் இக்கொள்கை கூறியுள்ளது. நீர் விலை நிர்ணய முடிவுகளைப் பின்பற்றுவதையொட்டி மட்டுமே மத்திய அரசின் நிதியுதவி வழங்கப்படும் என்ற சூழ்நிலைக்கு இது வித்திட்டுவிடக்கூடாது. நீர்வளம் போன்ற இயற்கை ஆதாரங்களுக்கு, குறிப்பாக விவசாயப் பயன்பாட்டிற்கான தண்ணீருக்கு விலை நிர்ணயிப்பது இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடிய உணர்வுபூர்வமான பிரச்சினை என்பதால், இது குறித்து மிகக் கவனமான அணுகுமுறையையே இந்த அரசு பின்பற்றும். மாநிலங்களுக்கிடையே பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, தேசிய நீர் இணைப்புத் திட்டத்தை செயல்முறைக்கு கொண்டுவரும் வகையில், தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு மீண்டும் வலியுறுத்துகிறது. மத்திய அரசு இதுகுறித்து உறுதியான நடவடிக்கைகள் எதையும் எடுக்காத சூழ்நிலையிலும், மாநில அரசின் நிதியைப் பயன்படுத்தி மாநிலத்திற்குள் பாயும்

நதிகளை இணைக்கும் திட்டத்தினை, சிறப்பு முன்னுரிமை அளித்து இந்த அரசு தீவிரமாக செயல்படுத்தி வருகிறது.

**12.** பொருட்கள் மற்றும் சேவைகள் வரியைப் (Goods and Services Tax) பொறுத்தவரை, மாநிலங்களின் நிதி சார்ந்த தன்னாட்சி அதிகாரங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு தீவிர மாற்று அணுகுமுறையாக, மதிப்புக் கூட்டு வரி, மத்திய கலால் வரி, மாநிலத்திற்கு உட்பட்ட சேவை வரி ஆகியவற்றுக்கான மாற்று வரிகளை விதித்து, வசூலித்து, பயன்படுத்துவதற்கான உரிமையை மாநிலங்களுக்கு வழங்க முன்வரவேண்டும். மாநிலங்களுக்கு இடையேயான பொருட்கள் மற்றும் சேவை வரி (Inter-State Goods and Services Tax), சுங்க வரி, பொருளாதாரத்தோடு சேர்ந்து அதிக வளர்ச்சி தரக்கூடிய நேரடி வரிகள் ஆகியவற்றை மத்திய அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம். மாநிலங்களுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய சூழலை மத்திய அரசு

ஏற்படுத்தாமல், பொருட்கள் மற்றும் சேவை வரி முறையை அமல்படுத்த இயலாது. மாநிலங்களின் நிதித் தேவைகள் மற்றும் உணர்வுகளுக்கு மதிப்பளித்தும், கூட்டாட்சித் தத்துவத்தைக் கருத்தில் கொண்டும், பரந்த நோக்கோடு இப்பிரச்சினைகளை அணுகி, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வினை எட்டும்படி மத்திய அரசை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

**13.** தற்போதுள்ள நலத் திட்டங்களில் காணப்படும் அனைத்துக் குறைபாடுகளுக்கும் மத்திய அரசின் நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டம் தீர்வாக அமையாது. நோபல் பரிசு பெற்ற புகழ்மிக்க பொருளாதார அறிஞர், ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் அவர்கள், "வளர்ச்சியென்பது ஒட்டுமொத்தப் பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்படுத்துவது மட்டுமல்ல; மக்களின் வாழ்வினை மாற்றுவதேயாகும்" எனக் கூறியுள்ளார். மக்களின் வாழ்வு நிலையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற உன்னதக் குறிக்கோளையும், வறுமை ஒழிப்பையும் ஏழைகளுக்கு பணப் பரிமாற்றம் செய்வதால் மட்டுமே சாதித்துவிட முடியாது. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் பொது விநியோகத் திட்டம், விலையில்லா மடிக்கணினி வழங்கிடும் திட்டங்கள்

போன்றவை பல்வேறு சமூக நோக்கங்களை மையமாகக் கொண்டவை. இந்த நோக்கங்களை மாதந்தோறும் பணம் அளிப்பதன் மூலம் மட்டுமே எய்திட இயலாது. எனவே, சமூகப் பாதுகாப்பு உதவித் தொகைகள், மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை போன்ற ஒரு சில திட்ட உதவிகளை வங்கிகள் மூலமான பணப்பரிமாற்ற முறையில் நேரடியாக அளிப்பதற்கு மட்டும் இந்த அரசு ஆதரவளிக்கும். பொது விநியோகத் திட்டம், உர மானியம் போன்றவற்றில், நிர்வாக வசதியைவிட, தக்க நேரத்தில் அப்பொருட்கள் கிடைப்பதையே முக்கியமாகக் கருத வேண்டியுள்ளதால், இதுபோன்ற திட்டங்களில் நல உதவிகளை பணமாக மாற்றி வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முயற்சியையும் இந்த அரசு கடுமையாக எதிர்க்கும். மேலும், மாநில அரசு மூலமாக வழங்கப்படாமல், நேரடிப் பணப் பரிமாற்றம் என்ற போர்வையில் மத்திய அரசே பயனாளிகளுக்கு நேரடியாக பணம் வழங்குவதற்கான எந்த ஒரு முயற்சியும் இந்த அரசுக்கு ஏற்புடையதல்ல. முறையான பொறுப்புடைமையை (Accountability) உறுதிசெய்ய வேண்டுமெனில், மத்திய அரசின் அனைத்து உதவிகளும் மாநில அரசின் மூலமாகவே வழங்கப்பட வேண்டும். இதுபோன்றே, சில்லரை வணிகத்தில்

அந்நிய முதலீட்டுக்கு அனுமதியளிக்கும் முடிவானது, சுய தொழில் செய்யும் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பெருமளவில் பாதிக்கும். இதனால் மத்திய அரசின் இந்த முடிவிற்கு இந்த அரசு, தனது கடும் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறது.

**14.** எனது முந்தைய உரையில் அறிவித்தவாறே, பெரும் கட்டமைப்புத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதை ஒருங்கிணைக்கவும், விரைவுபடுத்தவும், தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தை இந்த அரசு அமைத்துள்ளது. கட்டமைப்பு மேம்பாட்டில் அதிகரித்துவரும் தனியார் துறையினரின் பங்கேற்பினை வழிமுறைப்படுத்தி கண்காணிக்க தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவுமறைவின்மை (பொதுத்துறை–தனியார் பங்கேற்பு) விதிகள் 2012–யினை அரசு வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டமும் அதற்குரிய விதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. திட்டங்களுக்கு விரைவான ஒப்புதல் அளிக்க வகைசெய்யும் அமைப்பு முறையினை ஏற்படுத்தி, மாநிலத்தில் உலகத் தரத்திலான கட்டமைப்பினை உருவாக்கிட இந்தச் சீர்திருத்தங்கள் முதற்படிகளாகும். **இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிடும்**

**பாதையில் முன்னேறிடத் தேவையான திட்டங்களை விரித்துரைக்கும் 2023 தொலைநோக்கு திட்ட ஆவணத்தின் இரண்டாவது தொகுப்பை அரசு விரைவில் வெளியிடும்.**

**15.** பொருளாதார வளர்ச்சியில், பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான **9** சதவீதத்திற்கு மாறாக **8.05** சதவீத வளர்ச்சியையே நமது மாநிலம் எய்தியுள்ளது. கடந்த கால ஆட்சியில், வேளாண்மை மற்றும் தொழில் துறைகளின் குறைவான வளர்ச்சியானது மாநிலத்தின் ஒட்டுமொத்தச் செயல்பாட்டை அத்திட்ட காலத்தில் வெகுவாக பாதித்தது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், தேசிய அளவில் **8** சதவீத வளர்ச்சியை மட்டுமே எய்த இயலும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், நமது மாநிலம் **11** சதவீத வளர்ச்சி என்ற உயர் இலக்கை நிர்ணயித்துள்ளது. வேகமான, நிலைக்கத் தக்க, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில் எட்டுவதை உறுதிசெய்து, இந்த உயர் இலக்கை எட்டிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். **1.85** லட்சம் கோடி ரூபாயென கடந்த ஆண்டு மதிப்பிடப்பட்ட பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டை தற்போது **2.11** லட்சம் கோடி ரூபாயென

இந்த அரசு உயர்த்தியுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். இது பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால ஒதுக்கீட்டை விட 148 சதவீதம் கூடுதலாகும். **2013–2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 28,000 கோடி ரூபாயிலிருந்து 37,000 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். இது 32 சதவீதம் கூடுதலாகும்.** நிதிநிலையைத் திறம்பட நிர்வகித்து, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதற்கும் வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்கள் கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்யும்.

16. முன்னுதாரணமாகத் திகழக்கூடிய ஒளிவு மறைவற்ற, திறமையான நிர்வாகத்தை அளிப்பதற்கு இந்த அரசு முழுமையாக உறுதி பூண்டுள்ளது. **சிறந்த வழிமுறைகளை உருவாக்கியும், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும், நிர்வாகத்தில் ஒளிவு மறைவற்ற தன்மையை உறுதி செய்வதற்கும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. திட்டங்களுக்கான (Projects) மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளி பெற்று முடிவு செய்தல், பணிகளைச் செயல்முறைப்படுத்துதல், அளவீடு செய்தல், இவற்றுடன்**

இறுதியாக பணம் வழங்குதல் வரையிலான அனைத்து நிலைப் பணிகளையும் கணினிமயமாக்கி ஒருங்கிணைக்கக்கூடிய வகையில், ஒட்டுமொத்த திட்ட வடிவமைப்பு, செயலாக்கம், மேலாண்மை முறையை வகுத்து இந்த அரசு செயல்படுத்தும். இணையதளம் மூலமாகவே ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கான முறையையும் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் இந்தத் திட்டத்தில் ஓர் அங்கமாக இடம்பெறும். இந்த நடைமுறை பல்வேறு துறைகளின் திட்ட மேலாண்மைத் திறனை மேம்படுத்தி, திட்டங்களின் செயல்பாட்டை விரைவுபடுத்த உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

17. தேசிய மக்கள் தொகைப் பதிவு ஆவணத்திலிருந்து பெறப்படும் குடிமக்களின் உயிரியத் தகவலுடன் கூடிய தனிநபர் பற்றிய தகவல் தொகுப்போடு, (Biometry enabled individual citizen's data) ஆதார் எண்களை ஒருங்கிணைத்து, மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (State Residents Data Hub) ஒன்றினை இந்த அரசு விரைவில் ஏற்படுத்தும். அனைத்துத் துறைகளும் இந்த ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இத்தகவல் அமைப்பு

**செயல்படும். திட்டப் பயன்கள் முழுமையாக பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்யவும், சேவைகளைத் திறம்பட அளிப்பதற்கும், பொறுப்புகளைச் சரியாக வரையறுத்து, சீரிய முறையில் திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணிப்பதற்கும் அரசுக்கு இது பேருதவியாக இருக்கும். ஆதார் அடிப்படையில், மக்களுக்கான சேவைகளை எளிதாக அளிப்பதற்கும், நலத் திட்ட உதவிகளை நேரடியாகப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கும் இந்த ஒருங்கிணைந்த தகவல் அமைப்பு பயன்படுத்தப்படும்.**

18. கடந்த அரசால் சீர்செய்யப்படாமல் விட்டுச் செல்லப்பட்ட பெரும் பிரச்சினையாக மின்தட்டுப்பாடு உள்ளதால், அதைக் களைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் இந்த அரசு தீவிர முனைப்புடன் அனைத்து விதமான முயற்சிகளையும் எடுத்துவருகிறது. மாநிலத்தின் தினசரி மின் பயன்பாடு 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் 180 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவிலிருந்து 2013 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் 210 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. மின் நிர்வாக நிலைமையைச் சீர்படுத்த இந்த அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய

விரிவானதொரு அறிக்கையை, இப்பேரவையில் 31.10.2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அளித்துள்ளார்கள். மேட்டூர் அனல்மின் உற்பத்தித் திட்டத்தின் 600 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட மூன்றாவது அலகு, சோதனை உற்பத்தியை ஏற்கெனவே தொடங்கியுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனமும், தேசிய அனல்மின் உற்பத்தி நிறுவனமும் இணைந்து செயல்படுத்திவரும் வல்லூர் மின் உற்பத்தித் திட்டத்தின் 500 மெகாவாட் திறனுள்ள முதல் அலகு 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. தலா 500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட, இந்த கூட்டுமுயற்சித் திட்டத்தின் இரண்டு மற்றும் மூன்றாவது அலகுகள் முறையே 2013 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் அக்டோபர் திங்கள் முதல் செயல்படத் தொடங்கும். வட சென்னையில் அமைக்கப்பட்டுவரும் தலா 600 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு அலகுகள் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதம் முதல் செயல்படத் தொடங்கும். மின் உற்பத்தி நிலையங்களை திறம்பட இயக்கியும், மின்சார சந்தைகள் மற்றும் இதர

ஆதாரங்களிலிருந்து மின்சாரத்தை வாங்கியும் தற்போது மின்தடை கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது.

**19.** மண்டலங்களுக்கு இடையே மின்சாரம் கடத்தும் திறனுக்கான இணைய ஒப்பந்தப்புள்ளியில் பங்கெடுத்து, **2013** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை **500** மெகாவாட் அளவிற்கு மின்வழிப் பாதையைப் பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான நிறுவனம் வெற்றிகரமாக ஒப்பந்தம் பெற்றுள்ளது. தென்மண்டலத்திற்கு வெளியே ஏற்கெனவே முன்பதிவு செய்யப்பட்டு, மின்வழித்தட தொடர் இணைப்பு கிடைக்காததால் பயன்படுத்த இயலாதிருந்த மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான நிறுவனம் பெற்று பயன்படுத்த இது வழிவகுத்துள்ளது. இத்தோடு, அதிக மின்சாரம் தேவைப்படும் மாலை மற்றும் அதிகாலை நேரங்களில் ஒடிசா மாநிலத்திலிருந்து **150** மெகாவாட் மின்சாரம் பெறப்பட்டுள்ளது. **2013** ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் மூன்றாண்டுகளுக்கு **500** மெகாவாட் மின்சாரம் பெறுவதற்கான நடுத்தர காலக் கொள்முதல் ஒப்பந்தமும் முடிவு செய்யப்பட்டுள்ளது. புதியதாக அறிவிக்கப்பட்டுள்ள **660** மெகாவாட் எண்ணூர் விரிவாக்கத்

திட்டத்திற்கு ஏற்கெனவே உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. உடன்குடி மற்றும் எண்ணூரில் 2,640 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறன் கொண்ட, தலா 2 x 660 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும். புரட்சிகரமான சூரியமின் உற்பத்திக் கொள்கையை அறிவித்ததற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பாராட்டுகிறேன். மழைநீர் சேமிப்பு போலவே, சூரிய மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்துவதையும் ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி, சூரிய மின்சக்திக்கு இலக்கிடப்பட்டுள்ள 3,000 மெகாவாட் உற்பத்தியை இந்த அரசு எட்டும்.

**20.** முதன்மைத் துறையில் உயர் வளர்ச்சியை எட்டாமல், அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வளர்ச்சியை மாநிலம் எய்திட இயலாது. எனவே, இத்துறைக்கான ஒதுக்கீடுகள் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, கால்நடை வளர்ப்பு, பண்ணை அளவில் வருவாயைப் பெருக்கக்கூடிய பண்ணைசார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றின் மூலமாக, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்

முதன்மைத் துறையில் உயர் அளவான ஐந்து சதவீத வளர்ச்சியை எட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிர் உற்பத்தித் திறனை உயர்த்துதல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, சேமிப்புக் கிடங்கு வசதிகளை பெருக்குதல், விற்பனைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் ஆகியன இந்த அரசின் கவனத்தில் கொண்டுள்ள முக்கிய திட்டப்பணிகளாகும். சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு பயிர் சாகுபடியை மேற்கொண்டு, நிலையான அதிக வருவாயைப் பெற விவசாயிகளுக்கு இந்த முயற்சிகள் உதவும்.

**21.** விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கும்போது, நுகர்வோரும் பாதிக்கப்படாத வகையில் அரசு செயல்பட வேண்டிய பொருளாதார நிர்ப்பந்தத்தையும் கருத்தில் கொண்டு, சமநோக்குடன் கூடிய அணுகுமுறையை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. 2012–2013 ஆம் ஆண்டில் நெல்லுக்கான கொள்முதல் விலையை, குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு 1,350 ரூபாய் எனவும், சாதாரண ரகத்திற்கு 1,300 ரூபாய் எனவும் இந்த அரசு உயர்த்தியுள்ளது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட இது முறையே

70 ரூபாய் மற்றும் 50 ரூபாய் கூடுதலாகும். இதுபோன்றே, ஒரு டன் கரும்புக்கு, மத்திய அரசு 1,700 ரூபாய் என நிர்ணயித்த நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு (Fair and Remunerative Price) மாறாக, போக்குவரத்துக் கட்டணங்கள் உள்ளிட்ட மாநில அரசின் பரிந்துரை விலை (State Advised Price) டன் ஒன்றுக்கு 2,350 ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

22. பருவ மழை பொய்த்ததாலும், காவேரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் மறுத்ததால், மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டதாலும் மாநிலத்தில், குறிப்பாக காவேரி டெல்டா பகுதியில், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. காவேரிப் பாசனப் பகுதியில் 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்கிட தக்க நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவும், சம்பாப் பயிர்களுக்காக அறிவிக்கப்பட்ட 107.98 கோடி ரூபாய் சிறப்புத் திட்டமும் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களை ஓரளவு காத்திட உதவி புரிந்துள்ளன. சிறப்பினமாக, இந்த ஆண்டு காவேரி டெல்டா பகுதியில் வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் செலுத்தவேண்டிய காப்பீட்டுக் கட்டணப் பங்குத்தொகை

முழுவதையும் அரசே ஏற்றிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். எனினும், உணவு உற்பத்தி இலக்கினை மாநிலம் எய்துவதில் பெரும் பின்னடைவு ஏற்பட வாய்ப்புள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால் காவேரி பாசனப்பகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர் இழப்பிற்கு, உரிய நிவாரணம் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உறுதியளித்துள்ளார்கள். இதன்படி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து, பயிர் இழப்பை அளவிட்டு, தேவைப்படும் நிவாரணப் பணிகள் குறித்து பரிந்துரைப்பதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இதன் அடிப்படையில் உரிய நிவாரணம் அரசால் விரைவில் அறிவிக்கப்படும்.

**23.** இரண்டாவது வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில் மாநிலத்தில் பால் உற்பத்தி அதிகரித்து வருகிறது. பால் கூட்டுறவு அமைப்புகள் மூலமாகச் செய்யப்படும் சராசரி கொள்முதல், நாளொன்றுக்கு சுமார் நான்கு லட்சம் லிட்டர் அதிகரித்துள்ளது. விலையில்லாக் கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளை வழங்கும் அரசின்

முதன்மைத் திட்டங்கள் திட்டமிட்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **2013** ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அரசால் **24,000** கறவைப் பசுக்களும், **10** லட்சம் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுவிடும். இந்தத் திட்டப் பயனாளிகளில், **40** சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

**24.** கருணையுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தைத் தொடங்க அரசு ஆணையிட்டு செயல்படுத்தி வருகிறது. சிறப்பாகச் செயல்பட்டு அனைவருக்கும் பலனளிக்கும் பொதுவிநியோக அமைப்புடன் இத்திட்டமும் சேர்ந்து, நமது மாநிலத்திலிருந்து பசிப்பிணியை அறவே அகற்றி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. உணவு மானியத்திற்காக மட்டும் ஆண்டுதோறும் மாநில அரசால் **4,900** கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. விவசாயக் காலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, பொங்கல் பண்டிகையையொட்டி அரிசி

பெறுவதற்கான தகுதியுள்ள 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 300 கோடி ரூபாய் செலவில் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ரொக்கமாக 100 ரூபாய் உள்ளிட்ட பொங்கல் பரிசு அளிக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சிரமமான இக்காலகட்டத்திலும், வழக்கமான உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் பொங்கல் திருநாளை விவசாயிகள் கொண்டாட இது வழிவகுத்தது.

25. 2012–2013 ஆம் நிதியாண்டில், டிசம்பர் மாதம் வரை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 3,317.69 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டில் இதே காலகட்டத்தில் வழங்கப்பட்டதைவிட 23 சதவீதம் அதிகமாகும். மேலும், குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புகளுக்கு புத்துயிரூட்டுவதற்காக, இந்த நிதியாண்டில் 72 கோடி ரூபாயை மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு இந்த அரசு வழங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர் தேர்வுக்காக மாநில அளவிலும் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் பணியாளர் தேர்வு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. அரசியல் சட்ட 97–வது திருத்தத்தின்படி, மாநிலத்தில் உள்ள அனைத்துக்

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுதந்திரமான வகையில் நியாயமாகத் தேர்தலை நடத்துவதற்காக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் ஆணையத்தை இந்த அரசு அமைத்துள்ளது. வலிமையான ஜனநாயக அமைப்புகளாக மீண்டும் கூட்டுறவு அமைப்புகள் செயல்படும் வகையில், தேர்தல் நடைமுறையைத் தொடங்கிட அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன.

**26.** மாநிலத்தை விரைவான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் செலுத்திட, தொழில் உற்பத்தித் துறையில் (Manufacturing Sector) 13.8 சதவீத வளர்ச்சியை எய்த வேண்டுமென தொலைநோக்குத் திட்டம் 2023–ல் இலக்கிடப்பட்டுள்ளது. புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான தகுந்த நிலம் கிடைப்பதில் கடும் தடைகள் உள்ளதால், தொழில் பயன்பாட்டிற்காக நிலம் கையகப்படுத்துவதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் களையத்தக்க வகையில், முழுமையான கொள்கை ஒன்றினை செயல்முறைக்கு கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது. இந்த அரசின் சிறப்பான செயல்பாடுகளினால், 26,625 கோடி ரூபாய் முதலீட்டில் 1.45 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய

திட்டங்களுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்த நிதியாண்டில் கையெழுத்திடப்பட்டுள்ளன. முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக ஏற்கெனவே திகழ்ந்துவரும் நிலையில், நமது நாட்டிலேயே தொழில் முதலீடுகளுக்காக மிக உகந்த மாநிலமாகவும், ஆசியாவில் முதலீட்டிற்கு உகந்த முதல் மூன்று இடங்களில் ஒன்றாகவும் நமது மாநிலத்தை முன்னிறுத்த, இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

27. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதால், இத்துறைக்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. கைத்தறித் துறையை சீர்திருத்தி புத்துயிரூட்டிப் புனரமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 127 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தேயிலைத் தொழிலை, குறிப்பாக, சிறு தேயிலை உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். ஆறு கோடி ரூபாய் செலவில் இன்கோசர்வ் நிறுவனத்தின் கீழ் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் மேம்படுத்தப்பட்டு

வருகின்றன. சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நஞ்சநாட்டில் புதிய தேயிலைத் தொழிற்சாலை தொடங்கப்படும். 15 கோடி ரூபாய் செலவில் மேட்டுப்பாளையம் அருகில் தேயிலை தொகுப்பு பொது சேவை மையம் ஒன்று அமைக்கப்படும்.

28. அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்யும் கொள்கை நோக்கத்தோடு, நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்வு ஆகிய இரண்டிலும் பல முன்னோடி முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணம், மருத்துவத் துறையில் தமிழ்நாட்டின் மகத்தான சாதனைகளை பல நேர்வுகளில் குறிப்பிடுவதோடு, தமிழக அரசின் முயற்சிகளை பின்பற்றுமாறு மத்திய அரசுக்கும் அறிவுறுத்தியுள்ளது என்பது பெருமைக்குரியதாகும். பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதத்தை 107–க்கு கீழே குறைக்கவேண்டும் என்ற ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்கை (Millennium Development Goal) தமிழகம் ஏற்கெனவே எட்டியுள்ளது. தற்போது பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் 73–ஆகவும், சிசு இறப்பு விகிதம் 22–ஆகவும் உள்ளது. நமது நாட்டில், கடந்த 10 ஆண்டுகளில் பெண் குழந்தைகள் விகிதம்

அதிகரித்துவரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். மருத்துவத் துறையில் குறிப்பிட்ட இலக்குகளை எய்தியதற்காக, பதின்மூன்றாவது நிதிக்குழு பரிந்துரைத்த ஊக்கத் தொகையாக, நமது மாநிலம் 174 கோடி ரூபாயைப் பெற்றுள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

**29.** ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள புதிய கட்டடத்தை சிறப்பு பன்நோக்கு மருத்துவமனையாக மாற்றிடும் இந்த அரசின் முடிவைச் சரியென ஆமோதித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம் உச்ச நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், மாநிலத்தில் ஏழை எளியவர்கள் ஆபத்தான நோய்களால் பாதிக்கப்படும்போது வல்லுநர்களைக் கொண்டு சிறந்த சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த உதவும். புதியதாகத் தொடங்கப்பட்ட முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 534.39 கோடி ரூபாய் அளவிற்கு 2,38,749 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களுள், 82,829 பயனாளிகள் அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகளின் மூலம் பயன்பெற்றுள்ளதால், 176.28 கோடி ரூபாயை நமது

மருத்துவமனைகள் திரும்பப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசு உடனடி நடவடிக்கைகளைத் திறம்பட எடுத்துள்ளது. இந்த அரசின் அயராத முயற்சிகளாலும், பாரம்பரிய மருந்துகளைப் (Traditional medicines) பயன்படுத்த வேண்டுமென்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மதிநுட்பம் மிக்க ஆலோசனையினாலும் டெங்குக் காய்ச்சல் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**30.** அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கச் செய்யத் தேவையான கட்டமைப்பை உருவாக்கிட அரசு முயன்று வருகிறது. தேசிய அளவில் உள்ள மாணவர்–ஆசிரியர் விகிதம் **30** என இருந்தாலும், நமது மாநிலத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் இந்த விகிதம் **27** என்ற மேம்பட்ட அளவில் உள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அறிமுகம் செய்யப்பட்ட முப்பருவ முறை, தொடர் மற்றும் ஒட்டுமொத்தத் தேர்வு மதிப்பீடு முறை ஆகியவை மாணவ மாணவியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பேருந்துப் பயண அட்டைகள்,

புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மிதிவண்டிகள், காலணிகள், சீருடைகள், புத்தகப்பைகள், வடிவியல் பெட்டிகள், உலகப்படப் புத்தகம், வரைபடங்கள், கலர் பென்சில்கள் ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்குவது அவர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி, அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலும் விகிதத்தை உயர்த்தியுள்ளது. மொத்த எழுத்தறிவு நிலையில் மாநிலம் நல்ல முன்னேற்றம் கண்டிருந்தாலும், எழுத்தறிவு விகிதத்தில் ஆண் பெண்களிடையே காணப்படும் இடைவெளி இன்னும் அதிகமாகவே உள்ளது. இதைக் குறைத்திட அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதியில் மாநிலம் இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

**31.** எனது கடந்த ஆண்டு உரையில் அறிவிக்கப்பட்டவாறு பல்வேறு தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை ஒருங்கிணைத்து, அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நமது நாட்டிலேயே பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக ஏற்படுத்தும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. உயர்கல்வி வசதிகள்

தேவையான அளவு இல்லாத பகுதிகளில், 11 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்தக் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளன. இதுபோன்றே, தேவைப்படும் இடங்களில் இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 10 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் அமைக்கப்படுவதோடு, ஸ்ரீரங்கம் வட்டத்தில் தேசிய சட்டப் பள்ளி அமைக்கவும் அரசு அறிவித்துள்ளது. மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் மிகப்பெரும் வெற்றி அடைந்துள்ளது. நமது மாநிலத்தால் தொடங்கப்பட்டு, பின்னர் தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டுள்ள பல முன்னோடித் திட்டங்களைப் போல இத்திட்டமும் தேசிய அளவில் பின்பற்றப்படும் என நான் நம்புகிறேன்.

32. நகர்ப்புரங்களில் 48.45 சதவீதம் மக்கள் வாழ்ந்துவரும் நிலையில், நமது நாட்டிலேயே அதிக அளவு நகர்மயமான மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது. எனவே, வேகமான நகர்மயமாதலையும், அதனால் ஏற்படும் சவால்களையும் சந்திக்கக்கூடிய முதல் மாநிலமாக நமது மாநிலம் உள்ளது. இதனால், நகர்மயமாதலின் சவால்களை எதிர்கொள்ள நமது மாநிலம் காட்டும் பாதை,

தேசிய அளவில், இத்துறையில் பின்பற்றப்பட வேண்டிய அணுகுமுறைகளையும், கொள்கைகளையும் உருவாக்குவதற்கு வழிகாட்டியாக அமையும். மாநில நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தை உருவாக்கியது, முழு சுகாதாரத் திட்டம் போன்றன தமிழ்நாட்டின் பல தனிச் சிறப்புடைய முன் முயற்சிகள் என பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணம் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளது. இரண்டாவது ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தை மத்திய அரசு தொடங்காதது வருத்தத்திற்குரியது. எனினும், அதற்காகக் காத்திராமல், மாநில அரசு நிதியிலிருந்து ஆண்டுதோறும் 1,250 கோடி ரூபாயை ஒதுக்கி, சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களை நமது மாநிலம் தொடங்கியுள்ளது. சொத்து வரி பற்றிய பிரச்சினைகள் குறித்து வழிநடத்தவும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுரைகள் வழங்கவும் மாநில சொத்து வரி விதிப்பு வாரியத்தை அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருவாயை உயர்த்துவதற்கும், சீரிய நிதி

மேலாண்மைக் கட்டுப்பாடுகளை அவை பின்பற்றவும் இது பேருதவியாக இருக்கும்.

**33.** நகர்ப்புர ஏழை எளியோரின் வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்வது கடினமான பணியாகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நமது மாநிலத்தில் உள்ள நகர்ப்புரப் பகுதிகளில் உள்ள குடிசைவாசிகளின் எண்ணிக்கை 86 லட்சம் எனவும், வீட்டுவசதிப் பற்றாக்குறை 28 லட்சம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. போதிய குடியிருப்பு வசதிகள் இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் மறுவாழ்வு அளித்து, நமது மாநிலத்தில் உள்ள அனைத்து நகரங்களையும் குடிசைப் பகுதி இல்லாத நகரமாக மாற்றும் குறிக்கோளை எய்திட இந்த அரசு ஆவன செய்யும். குடியிருக்கும் இடத்திலேயே வசதிகளை மேம்படுத்துவது, மாற்று இடங்களில் வீடுகள் கட்டிக் குடியமர்த்துவது ஆகிய இரண்டு திட்ட முறைகளும் இந்த நோக்கத்தை எட்டப் பயன்படுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த பெரும் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், மத்திய அரசின் ராஜீவ் வீட்டுவசதித் திட்டம் மற்றும் இதரத் திட்டங்களின் கீழ் போதிய நிதியுதவி கிடைக்கும் என நம்புகிறேன். **இப்பணியின் தொடக்கமாக, 206.09 கோடி ரூபாய்**

**மதிப்பீட்டில், குடிசைகளில் வசிப்போருக்கான 2,775 குடியிருப்புகளைக் கட்டுவதற்கான ஏழு முன்னோடித் திட்டப்பணிகள் ராஜீவ் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இதற்கான மத்திய அரசின் ஒப்புதலை நாம் எதிர்நோக்கியுள்ளோம். தகுதியுள்ள குடும்பங்களைக் கண்டறிவதற்காக தற்போது நடைபெறும் கணக்கெடுப்புப் பணி முடிவடைந்தவுடன், வரும் ஆண்டுகளில் மேலும் இதுபோன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

**34.** நமது மாநிலம் வேகமாக நகர்மயமாகி வரும் அதே வேளையில், **50** சதவீதத்திற்கு மேலான மக்கள் வசிக்கக்கூடிய கிராமப்புறப் பகுதிகளின் கட்டமைப்புத் தேவைகளும் நகர்ப்புரம் போன்றே மிக முக்கியமானவை. கிராமப் பகுதிகளில் தரமான சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு வசதிகளை அளிப்பது, திட்டமிடப்படாத வகையில் வேகமான நகர்மயமாதலினால், நகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் ஏற்பட்டுவரும் நெருக்கடியை தடுக்க உதவும் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. கிராமப்புறக் குடியிருப்புப் பகுதிகளை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் ‘தாய்’ திட்டம் இந்த வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாராட்டுக்குரிய முயற்சியாகும்.

மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின்சக்தி வசதி கொண்ட பசுமை வீடுகள் கட்டும் புதுமையான பெருந்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. **அரசு சாராத் தொண்டு நிறுவனங்களால் சுனாமி மறுவாழ்விற்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் குடியிருக்கும் மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, மேல் கூரையில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ள 16,883 வீடுகளின் கான்கிரீட் கூரைகளின் மேல் ஓடுகள் பதிப்பதற்காக ரூபாய் 30.69 கோடியை இந்த அரசு வழங்கும்.**

35. தமிழ்நாட்டின் வறுமை நிலை ஆண்டுதோறும் தொடர்ந்து குறைந்து வருவது மனநிறைவை அளிக்கிறது. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனத்தின் 66–வது சுற்று கணக்கெடுப்பின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை 121.8 இலட்சமாகும். இது மொத்த மக்கள் தொகையில் 17.1 சதவீதமாகும். மொத்த மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் அளவு கிராமப்புறப் பகுதிகளில் 21.2 சதவீதமாகவும், நகர்ப்புரங்களில் 12.8 சதவீதமாகவும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட புதுவாழ்வுத் திட்டத்தை வறுமை

ஒழிப்பிற்கான மிகச் சிறந்த திட்டங்களுள் ஒன்று என மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார இயக்கம் என்ற புதிய வறுமை ஒழிப்புத் திட்டத்தை மாநில அரசும் மத்திய அரசும் இணைந்து செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 31 கிராமப்புற மாவட்டங்களிலும், ஐந்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் நிலைக்கத்தக்க வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க இந்த இயக்கம் கருதியுள்ளது. சிக்கலான நகர்ப்புர வறுமைப் பிரச்சினைகளைத் தீர்க்க, மத்திய அரசின் ஸ்வர்ண ஜெயந்தி ஷகரி ரோஸ்கார் யோஜனா திட்டம் போதுமானதாக இல்லாததால், மத்திய அரசு உறுதியளித்தவாறு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தை தொடங்கும் வரை காத்திராமல், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தை நமது மாநிலம் தொடங்கியுள்ளது. இந்த முக்கியமான திட்டத்தை மத்திய அரசும் விரைவில் தொடங்கி, நகர்ப்புர வறுமைப் பிரச்சினையை மேலும் உறுதிபடத் தீர்க்க மாநில அரசுக்கு உதவிடும் என நம்புகிறேன்.

**36.** அடுத்த பதினோரு ஆண்டுகளில் இரண்டு கோடி இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கத் தொலைநோக்கு திட்டம் 2023 உத்தேசித்துள்ளது. வரும் பதினோரு ஆண்டுகளில் புதிதாக வேலைவாய்ப்பை எதிர்நோக்கும் ஒன்றரைக் கோடி இளைஞர்களும், ஏற்கெனவே வேலைவாய்ப்பைப் பெற்றுள்ள 50 லட்சம் பேரும் இதில் அடங்குவர். தனியார் தொழில் நிறுவனங்களும் வர்த்தக அமைப்புகளும் இந்த முயற்சியில் பங்கேற்கும் வகையில், தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டு சங்கம், தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டு நிறுவனமாக மாற்றி அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கல்வி பயிற்றுவிக்கும் அமைப்பிற்கு வெளியில் இருக்கக்கூடிய திறனற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய அதே வேளையில், படித்து வெளியே செல்லும் மாணவர்களுக்கு திறனையும் வேலைவாய்ப்புக்கு உகந்த தகுதியையும் ஏற்படுத்தும் வகையில் நமது கல்வி அமைப்பில் உரிய மாற்றங்களை ஏற்படுத்தவும் இந்த அரசு கவனம் செலுத்தும்.

**37.** பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதிலும், சமச்சீரான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதிலும் தரமான சாலைகளுக்கு உள்ள முக்கியப் பங்கினைக் கருத்தில்

கொண்டு சாலைகளை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்த ஆண்டு 3,623 கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் உதவியோடு 235 கோடி ரூபாய் செலவில் 121 புதிய பாலங்களைக் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. **மாமல்லபுரத்தையும் எண்ணூரையும் இணைக்கக்கூடிய 162 கிலோ மீட்டர் நீளமுடைய சென்னை சுற்று வட்டச் சாலை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும், நாகப்பட்டினத்தில் பொதுத் துறை – தனியார் துறை பங்கேற்பின் மூலமாக ஆழ்கடல் துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசு தொடங்கியுள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

38. கிராமப்புற மற்றும் நகர்ப்புர மக்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதில் பொதுத் துறைப் போக்குவரத்து அமைப்பு பெரும் பங்கு வகிக்கிறது. போதிய சேவைகள் இல்லாத கிராமப்புறப் பகுதிகள் உட்பட, மாநிலமெங்கும் தேவைப்படும் போக்குவரத்து வசதிகளை அளித்திட அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவைத்

தட எண்ணிக்கை ஜுன் **2011–ல் 19,167**–லிருந்து, டிசம்பர் **2012–ல் 20,500** ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின், பேருந்துகளின் சராசரி வயது பெருமளவில் குறைக்கப்பட்டு, பேருந்துப் பயணம் மிகவும் பாதுகாப்பானதாகவும், நம்பிக்கைக்குரியதாகவும், வசதியானதாகவும் மாறியுள்ளது. ஏழைகளுக்கும் நடுத்தர மக்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளே மிக முக்கிய போக்குவரத்து வசதியாக உள்ளன. கடந்த **14.9.2012** முதல் டீசல் விலை மிக கணிசமாக உயர்த்தப்பட்டுள்ள போதிலும், இந்த விலை உயர்வினால் ஆண்டுக்கு ஏற்படும் **383** கோடி ரூபாய் இழப்பினை அரசே போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்து, இதன் சுமை பொது மக்களின்மேல் சுமத்தப்படாமல் இருப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. ஆனால், ஏமாற்றம் அளிக்கக்கூடிய வகையில் 'எளிய மக்களின் பாதுகாவலன்' என கூறிக்கொள்ளும் மத்திய அரசு, **18.1.2013** முதல் அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெறும் மொத்த டீசல் கொள்முதல் மீதான மானியத்தை முற்றிலும் விலக்கிக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கையால் எரிபொருள் செலவு மீண்டும் **23.75** சதவீதம் உயர்ந்து,

இவ்வுயர்வால் மட்டும் ஆண்டுக்கு **744** கோடி ரூபாயும், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள கூடுதல் செலவையும் சேர்த்து நான்கு மாதத்திற்குள் ஏற்பட்ட மொத்த விலை உயர்வால் **1,127** கோடி ரூபாய் அளவிற்கு ஒரு ஆண்டுக்கான எரிபொருள் செலவு உயர்ந்துள்ளது. இது மாநில போக்குவரத்து கழகங்களை நிதிப் பேரழிவின் விளிம்பிற்கே கொண்டு சென்றுவிட்டது. மத்திய அரசின் இந்த இரட்டை விலை நிர்ணயிப்புக் கொள்கை பொது நலனுக்கு எதிரானது என்பதாலும், மானியத்தோடு கூடிய எரிபொருளை தனியார் பேருந்து நிறுவனங்கள் தொடர்ந்து பெறும் நிலையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் இது பாதகமாக உள்ளதாலும், இதை எதிர்த்து உரிய நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

**39.** நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநில நிர்வாக பொறுப்பினை ஏற்கும் போதெல்லாம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பெரும் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை அனைவரும் அறிவர். **1993** ஆம் ஆண்டு அவர்களது ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம் நமது மாநிலத்தில் விளையாட்டு வசதிகளை சர்வதேசத்

தரத்திற்கு உருவாக்கிட உதவி புரிந்துள்ளது. பல்வேறு விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகைகள் மற்றும் பரிசுகளை இந்த அரசு பெருமளவுக்கு உயர்த்தியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த உறுதியான முன்முயற்சியின் காரணமாகவே, பெருமைவாய்ந்த 20–வது ஆசிய தடகளப் போட்டி சென்னையில் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டாம் தேதி முதல் ஏழாம் தேதிவரை நடைபெற உள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது இளைஞர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவும், உலகின் தலைசிறந்த வீரர்களுடன் போட்டியிடவும் இது ஊக்கப்படுத்தும் என உறுதியாக நம்புகிறேன்.

40. தற்போதுள்ள வருவாய் வட்டங்களைப் பிரித்து 2012–2013 ஆம் ஆண்டில் ஒன்பது புதிய வட்டங்களை உருவாக்கிட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், கூடுதல் வட்டங்களை உருவாக்குவதற்கான தேவை குறித்து இதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு பரிசீலித்து வருகிறது. இக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், எதிர்காலத்தில் புதிய வட்டங்களை

உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்கும். **வருவாய் நிர்வாகம், நில நிர்வாகம், நில அளவை, பதிவுத் துறை ஆகிய துறைகளின் நில நிர்வாகம் குறித்த செயல்பாட்டை ஒருங்கிணைத்து, ஓர் ஒருங்கிணைந்த நில ஆவண மேலாண்மை அமைப்பை உருவாக்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தேசிய நில ஆவண நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம், திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள 21 வட்டங்களில் நில ஆவண மேலாண்மை மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சி மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்படும்போது நில நிர்வாக மேலாண்மை மேலும் ஒருங்கிணைக்கப்பட்டு மக்கள் எளிதில் பயன்பெற வழி ஏற்படும் என நான் நம்புகிறேன்.**

41. அனைவரையும் உள்ளடக்கி நற்பயன்களைத் தரும் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் நமது மாநிலம் தன்னிகரற்றதாகும். சமூகப் பாதுகாப்பு உதவித் தொகையை மாதந்தோறும் 1,000 ரூபாய் என இந்த அரசு உயர்த்தியது எளியோருக்கும், ஆதரவற்றோருக்கும் பெரும் நிவாரணமாக அமைந்துள்ளது. அனைவருக்கும் பலன்கள் சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளை எய்தும் வகையில் மாற்றுத்

திறனாளிகள், பெண்கள் மற்றும் குழந்தைகளை இலக்காகக் கொண்டு பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்காகவும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனியார் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்க்கும் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியது ஒரு முன்னோடி முயற்சியாகும். இந்த அரசு எடுத்துள்ள இம்முயற்சிகள் அனைத்தும் பல்வேறு பிரிவினரிடையே காணப்படும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைய நிச்சயம் வழிவகுக்கும்.

**42.** இதுவரை இந்த அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள், வகுத்துள்ள சில கொள்கைகள் சிலவற்றை குறித்து நான் இங்கு கோடிட்டு காட்டியுள்ளேன். மக்களின் பேராதரவு பெற்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்களின் தேவையறிந்து திறம்பட செயல்படக்கூடிய, ஒளிவுமறைவற்ற மக்களின் உற்ற நண்பனாக விளங்கும் அரசை நடத்தி வருகிறார்கள். அவருடைய விவேகம், புதுமையைப் புகுத்தும் திறன், கூரிய அறிவாற்றல்

ஆகியவற்றால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து, அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும், பொருளாதாரச் செழுமையையும் உருவாக்கி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக நமது மாநிலத்தை மாற்றிக்காட்டுவார் என நான் உறுதியாக நம்புகிறேன்.

**43.** மாநிலத்தின் அனைத்து முக்கிய பிரச்சினைகள் குறித்தும் ஆக்கபூர்வமாகவும், நல்ல அணுகுமுறையோடும் விவாதம் செய்து, அனைவருக்கும் முன்னுதாரணமாக விளங்கும் வகையில் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திட அரசுக்கு இந்த மன்றம் வழிகாட்டும் எனத் திடமாக நம்புகிறேன். உங்கள் அனைவரையும் மீண்டும் ஒரு முறை வாழ்த்தி, இத்துடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**